இணைப்பு III

[407 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1. இம்மாநிலத்தில் கீழ்க்காணும் இடங்கள் விலைவாசி அதிகமுள்ள பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன:—

(1) இராமேஸ்வரம், குருசடைத் தீவுகள், மண்டபம்.

(2) பெரியார் மாவட்டத்தில் (கோயம்புத்தூர் மாவட்டத்தில் முன்பு இருந்த) தாளவாடி வளர்ச்சி வட்டாரம்.

(3) தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் பொட்டியம், புதூர், புதுப்பாளப்பட்டு, கரியலூர், பாச்சேரி.

2. தாளவாடி வளர்ச்சி வட்டாரம் நீங்கலாக மேற்சொன்ன இடங்களில் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு தமிழ் நாடு தனிச்சம்பளம், படிகள் விதியைச் சேர்ந்த 8 (பி) விதியில் சுட்டிய விதங்களில், விலைவாசி அதிகமுள்ள பகுதிகளுக்கான படி வழங்கப்பட்டு வந்தது. (முன்பு கோயம்புத்தூர் மாவட்டத்திலும் தற்போது பெரியார் மாவட்டத்திலும் உள்ள) தாளவாடி வளர்ச்சி வட்டாரத்திலுள்ள அரசுப் பணியாளர்களுக்கு பணியாளரின் அடிப்படைச் சம்பளத்தில் 20 சதவீதம், சிறப்பு ஈட்டுப்படியாகக் கொடுக்கப்பட்டு வந்தது. இத்தொகை விலைவாசி அதிகமுள்ள பகுதிப் படிக்குப் பதிலாக திங்கள் தோறும் உயரளவு ரூபாய் 80-க்கு உட்பட்டதாகும். விலைவாசி அதிகமுள்ள பகுதிகளென தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ள எல்லா இடங்களுக்கும் அப்படியை வழங்கும் திட்டம் பரிசீலிக்கப்படும்வரையில், தாளவாடி வளர்ச்சி வட்டாரத்தைப் பொறுத்தமட்டில், அந்தப் படி வழங்கப்படுவதற்குப் பதிலாக சிறப்பு ஈட்டுப்படி வழங்கும் திட்டம் 1—4—1978-லிருந்து நிறுத்தி வைக்கப்பட்டது.

3. விலைவாசி அதிகமுள்ள பகுதிகளுக்கான படி வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவது குறித்து ஆய்ந்து பார்த்த தமிழ் நாடு இரண்டாவது சம்பளக்குழு பின்வருமாறு பரிந்துரைத்துள்ளதையும் இச்சந்தர்ப்பத்தில் ஈண்டு குறிப்பிடலாம்:—

" உள்நாட்டில் வெகு தொலைவில் சரியான போக்குவரத்து வசதியற்ற ஒதுக்குப்புறமான இடங்களிலும், இராமேஸ்வரம், மண்டபம் முதலிய தீவுகளிலும் பணியிலமர்த்தப்பட்டுள்ள அரசுப் பணியாளர்களுக்கு இத்தகைய பகுதிகளில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவை ஈடு செய்ய கூடுதல் படி வழங்கப்படுகிறது. தற்போது பெரும்பாலும் இராமேஸ்வரத்திலும்

[1981 மார்ச் 9

மண்டபத்திலும் பணியாற்றுகின்ற பத்திரப் பதிவுத் துறை, கூட்டுறவுத் துறை, மீனளத் துறை, காவல் துறைப் பணியாளர்களுக்கு இந்தப்படி கொடுக்கப்படு கிறது. இவ்விடங்களில் உள்ளவர்கள், இயல்பான போக்குவரத்தைக் கொண்டு இவ்விடங்களுக்குச் செல்வது மிகவும் கடினமாக இருந்தபோது இன்றியமையாப் பொருட்கள் கிடைப்பது அரிதாய் இருந்தபோது, இந்தப் படி அனுமதிக்கப்பட்டது. தற்போது மண்டபம், அப்பகுதியிலுள்ள மற்ற இடங் களுடன் முறையாக பேருந்து, இரயில் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இராமேஸ்வரத்திற்கும் முறையான இரயில் போக்குவரத்து உள்ளது.

இந்தப் படியைத் தொடர்ந்து கொடுப்பதற்கான அவசியம் ஏதுவும் இருப்பதாக நாங்கள் நம்ப இயலவில்லை. இதனை நிறுத்தி விடலாம். ஆனாலும் தற்போது இந்தப் படியைப் பெற்று வருவோர்க்கு பாதுகாப்பு அளிக்கப்படலாம்."

விலைவாசி அதிகமுள்ள பகுதிகளுக்கான படி கொடுப்பது குறித்து தமிழ்நாடு இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை. ஆகவே, இந்தப் படியை "விலைவாசி அதிகமுள்ள படிகளென" அறிவிக்கப் பட்ட இடங்களில் அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களுக்குத் தங்கு தடை ஏதுமின்றி தொடர்ந்து வழங்கப்பட்டது.

4. இதுபற்றி ஆய்ந்து பார்த்த தமிழ் நாடு மூன்றாவது சம்பளக் குழு பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது :—

"விலைவாசி அதிகமுள்ள பகுதிகளில் பணியாற்றும் அரசிதழ் பதிவிலா அலுவலர்களுக்கு வழங்கப்படுகிற இந்தப் படியின் அளவு, பணியாளர்களின் சம்பளத்திற்கேற்ப ரூபாய் 2.50-லிருந்து ரூபாய் 20.25 வரையில் உள்ளது. இவ்விடங்களுக்கு சாலைப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள காரணத்தை முன்னிட்டு இந்தப் படியை நிறுத்திவிடலாம் என்று இரண் டாவது சம்பளக் குழு பரிந்துரைத்தது. ஆயினும், இந்தப் படியை அப்போது அனுபவித்து வந்தவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படலாம் என்றும் அக்குழு பரிந்துரைத்தது. எங்களுக்கு முந்தைய குழு செய்த பரிந்துரையை அரசு ஏற்று செயல்படவில்லையென நாங்கள் அறிகிறோம். சில இடங்களில் உள்ள பணியாளர்களின் சங்கங்கள் இந்தப் படியை இன்னும் பரவலாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளன. இது சம்பந்த மாக, முந்தைய குழுவின் பரிந்துரையினின்றும் மாறுபடுவதற்கான காரணம் ஏதும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை."

1981 மார்ச் 9]

5. போதிய போக்குவரத்து வசதிகள் இன்றி அதனால் இன்றியமையாப் பொருட்கள் கிடைப்பது அரிதாக இருந்ததாலும் ஏற்படக்கூடிய செலவை ஈடு செய்யவே விலைவாசி அதிக செலவினப் பகுதிப்படி வழங்க ஆணையிடப் பட்டது. இவ்விடங்களுக்கு சாலைப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன என்பதை ஈண்டு குறிப்பிடலாம். விலைவாசி அதிகமுள்ள பகுதி களுக்கான படியை நிறுத்திவிடுவது சம்பந்தமாக மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்து அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்பதென முடிவெடுத்தது. தமிழ் நாடு தனிச்சம்பளம் படிகள் விதிகளின் 7 (2) விதியில் கண்டுள்ள பல்வேறு அதிக செலவின இடங்களில் பணியாற்று கின்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட விலைவாசி அதிகமுள்ள பகுதிகளுக் கான படி வழங்கப்படுவதை 31—1—1981 மாலை முதல் நிறுத்த நிதித் துறையின் (படிகள்-2), 3—2—1981 நாளிட்ட 55 ஆம் எண்ணில் அரசாணை வெளியிடப்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது சம்பள ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளுக்கிணங்கவே மேற்படி அரசாணை வெளியிடப் பட்டது. இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முகாமிலும், இராமேஸ்வரம் பகுதியிலும் பணியாற்றுகின்ற அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர் களுக்கும் வழங்கப்பட்டு வந்த அதிக செலவினை இடப்படி திடீரென நிறுத்தப் படவில்லை என்பதை ஈண்டு குறிப்பிடலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS